www.agaram.lk

ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07

# றோயல் கல்லூரி – கொழும்பு 07

**தமிழ் இலக்கிய நயம் I**

**இரண்டாம் தவணை - 2022**

**தரம் 11**

***03 மணித்தியாலம்***

கவனிக்க: வினாத்தாள் I இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

01) I தொடக்கம் V வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

I. 'மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோ பாவம் வானைப்போல் விரிவடைந்து...

அ) இத்தொடர் இடம்பெற்றுள்ள கவிதையின் ஆசிரியர் யார்?

................................................................................................

ஆ) இதிலுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

................................................................................................

................................................................................................

II. 'ஐய! நீ ஆழி வேந்தன் அடியினை பிரிகிலாதாய்
எய்தியது என்னை? ......

அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

................................................................................................

................................................................................................

ஆ) இங்கு ஆழிவேந்தன் எனக்குறிப்பிடப்படுபவர் யார்?

................................................................................................

III. 'அணிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்'

அ) இவ் அடிகள் எந்த நூலில், எவ் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன?

................................................................................................

................................................................................................



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

ஆ) இதன் பொருளைத் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

IV. ‘ஆற்றிலே கஞ்சிகுடியென்றான் களித்தின்று போவென்றேன் …’

அ) இங்குள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஆ) இத்தொடர் இடம்பெற்ற பாடலின் ஆசிரியர் யார்?

……………………………………………………………………………………………

V. ‘கடைசிவரை அப்பாவும் மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க’

அ) தூர் எடுத்தல் என்றால் என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஆ) அப்பாவின் மனதில் எவ்வாறான தூர் எடுக்கப்படல் வேண்டும்?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

02) கீழ்க்காணும் செய்யுட் பகுதியை அல்லது உரைநடைப் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்.

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும் தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!



agaram.lk

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் ‘கிறுக் கிறுக்’ கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதிராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவமாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தனையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந் தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலை படைப்போம்.

1. இக்கவிதையின் ஆசிரியரையும், கவிதையின் தலையங்கத்தினையும் குறிப்பிடுக.
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

2. இக்கவிதையில் ஆசிரியர் கூறவரும் விடயம் யாது?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

3. இங்கு தொழில் புரியும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எவை எனக் கூறப்பட்டுள்ளது?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

4. இங்கு கையாளப்பட்ட உவமைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**அல்லது**



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

உச்சி வெய்யில் உடலை வெப்பமேற்றி முதுகை நனைக்கிறது. மேடு, பள்ளம் என்று சைக்கிள் மிதித்ததில் கால் விரல்களில் ஊமைவலி. கையில் கடிதக் கட்டுடன் வியர்வை நெடியோடு, ஊரை வலம் வருகிறேன் நான். காற்றை யாரோ கடத்திக் கொண்டு போன பிரமையில் மரங்கள் சோகம் சுமக்கின்றன. எதிர்பார்ப்பில் சிறகு முளைத்த மனித ஈக்கள் என்னை நோக்கி விரைகின்றன. கனவிலும் நினைவிலும் கடிதக்காரனை ஆராதிப்பதில் ஆசுவதம் காணும் புது யுகமிது.

‘எங்களுக்குக் கடிதம் இருக்கியா?’ பல தடவைகள் கேட்டு செவி மரத்துப் போன கேள்விதான் இது! என்றாலும் தினமும் வந்து தொலைகிறேன். கடிதங்களோடு பதிலைக் கம்யூட்டர் அறியத்துடிக்கும், அவசரக் குடுக்கைகள் வெளிநாடு போன பர்த்தாவை நினைத்து உருகி கனவுகள் சுமந்த கண்களால் வினா எழும்பும் ஒன்றைக் குயில்கள். ஆத்மார்த்த சினேகிதனை வரவேற்கும் உற்சாகத்தோடு, நெருக்கமாய் ஒட்டிக் கொள்வோர். உறவுமுறை விளித்து, காரியத்தைக் கச்சிதமாய் அறிய விழைவோர்.

இப்படி பல ரகத்தினரை தினமும் பார்க்கின்றேன். அத்தனை முகங்களிலும் பளிச்சிடும் பாவங்கள் எனக்குப் பரிச்சயமானவை. இந்த அந்நியமற்ற யதார்த்தத்தில் ஒரு மழலையைப் போல் மனதைப் பறி கொடுக்கிறேன். நிழல் படுத்துறங்கும் குறுகவான செம்மண் பாதை வெள்ளைப் புறாக்கள் துள்ளிக் குதிக்கும் கலவன் பாடசாலை. விழுது பரப்பி அடர்ந்து செறிந்த ஆலமரம் துல்லியம் துலங்கும் இறை இல்லமாம் பள்ளிவாசல். குச்சில் வீடுகள் மாடிவீடுகள், தேநீர்க்கடைகள் குப்பைக் கடதாசிகளை மென்று சுவாரசியமின்றிச் செல்லும் கால் நடைகள் இன்னும் செயற்கை முகம் தரிக்காத கிராமத்து புன் சிரிப்புக்கள்.

1. இப்பகுதி அமைந்த சிறுகதையின் ஆசிரியர் யார்? இவர் எவ்விடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

2. இங்கு தபாற்காரனின் ஏழ்மை நிலை எடுத்துக்காட்டப்பட்டிருப்பதைத் தருக.

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

3. தபாற்காரனை எதிர்பார்க்கும் மக்கள் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளார்கள்?

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………

4. இங்கு காட்டப்படும் கிராமம் பற்றிய சித்திரிப்புக்களை எடுத்துக் காட்டுக.

……………………………………………………………………………………………………

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

கவனிக்க: வினாத்தாள் II இல் I ம் வினாவுக்கும் ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

01) பின்வரும் கவிதையை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள தொடர்களின் / வழிகாட்டற் குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை தயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்த்தண் டனவந் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந்தாக நமக்கு

அ) கவிதை எழுந்த காலமும் ஆசிரியரும்

ஆ) எடுத்தாளப்பட்டிருக்கும் அணிகள்

இ) காதலியின் ஊர்ச்சிறப்பு

ஈ) திணையும் துறையும்

உ) கவிஞரின் கவித்துவ ஆற்றல் (6×5 = 30 புள்ளிகள்)

- எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

02) கிட்கிந்தைப் படலத்திலே

அ) தாரையின் தோற்றம் செயல்திறம்

ஆ) இலக்குமணனின் வருகையைத் தடுத்து நிறுத்த அனுமன் கூறிய உபாயம் என்பற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

agaram.lk

03) திருக்குறள் ‘நலம் புனைந்து உரைத்தல்’ அதிகாரத்தில்

அ) தலைவியின் முகஅழகு

ஆ) தலைவியின் மென்மைத்தன்மை என்பன எடுத்துக் காட்டப்பட்டிருக்குமாற்றைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

04) வஞ்சியர் காண்டம் என்ற நாடகத்திலே

அ) கண்ணகி அனுபவித்த துன்பங்கள்

ஆ) மாதவி பற்றிய கண்ணகியின் மனப்பதிவுகள் என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குக. (15 புள்ளிகள்)

05) ‘எலியம்’ என்ற சிறுகதையிலே

அ) எலிகளை ஒழிக்க மேற்கொள்ளும் முயற்சிகள்

ஆ) ஆசிரியருடைய மொழிநடை என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07 ROYAL COLLEGE, COLOMBO 07

# றோயல் கல்லூரி – கொழும்பு 07

## இரண்டாம் தவணை - 2022

**தமிழ்மொழியும் இலக்கியமும் III**

**தரம் 11**

***02 மணித்தியாலம்***

கவனிக்க:

I. அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
II. 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
III. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01) சுருக்கமான விடை தருக.

I. ‘பூத்தஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன் ….’
அ) காதலியின் முகஅழகு எவ்வாறு விபரிக்கப்படுகிறது?
ஆ) காதலின் பார்வையால் கவிஞர் தனர் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு விபரிக்கிறார்?

II. ‘ஓடி மண்டை பற்றிப் பரபரெனும் பாரிற் பிண்ணாக்கு முண்டாம்…’
அ) ‘பிண்ணாக்கு’ என்ற சொல் இரு பொருள்பட வருமாற்றை விளக்குக.
ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

III. ‘விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு போதம் மூன்றும் நலம்செயும் நாடு போதம் மூன்றும் நலம் செயும் நாடு…’
அ) இங்கு குறிப்பிடப்படும் விசேஷம் மூன்றும் எவை?
ஆ) போதம் மூன்றும் யாவை?

IV. ‘யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த மெய்யதா வால்குழைக்கும் நாய்…’
அ) இங்கு யானை பற்றிய விபரிப்பின் மூலம் வலியுறுத்தப்படும் நீதி யாது?
ஆ) நாய் பற்றிய விபரிப்பின் மூலம் யாது வலியுறுத்தப்படுகின்றது?

V. ‘இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத் தான் அந்தப் பாரிய கூட்டம்…’
அ) இருவர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
ஆ) பாரிய கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் யார்?

VI. ‘வெங்கட் பிறைக்கும், கரும்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே..’
அ) இங்கு கரும்பிறை எனச் சுட்டப்படுபவர் யார்?
ஆ) இங்கு அப்பு எனக் குறிப்பிடப்படுவது எது?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

VII. ‘ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’
அ) இங்கு கொக்கு யாருக்கு உவமிக்கப்படுகிறது?
ஆ) இங்கு கையாளப்பட்ட உரிச்சொல் யாது?

VIII. ‘தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையிலும்…’
அ) இப்பாடலடி இடம் பெறும் நூல் யாது?
ஆ) சினை எனக்குறிப்பிடப்படுவது எது?

IX. ‘கார்தட்டியப ஞ்சகாலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்துக்கு…’
அ) இப்பாடலைப் பாடியவர் யார்?
ஆ) இங்கு எடுத்துக் காட்டப்படும் உயர்பண்பு யாது?

X. ‘இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக்
கலையில் கைதேர்ந்ததாக இருந்தது.
அ) அட்ச இருதயக்கலை என்றால் என்ன?
ஆ) அந்தக்கலையில் தேர்ச்சி பெற்றவன் யார்?

02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஐ. பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக் கொண்டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் கமராபதியளித்த
கோவே ராச குலதிலகா
வெங்கட் பிறைக்குங் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

அ) இங்கு சோழநாட்டின் வளம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
ஆ) இங்கு தமிழ்நாடனின் வீரம் எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

ஐஐ. நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிட
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்தி டச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேசபக்தர் வரவினைக் காத்தல் போல்

அ) இங்கு பாரதியாரின் காதல் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
ஆ) இங்கு கையாளப்பட்ட அணிகளை இனங்கண்டு விளக்குக.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

ஐஐஐ. உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை.

அ) மனநிறைவைக் காட்டும் செயல்களாக இங்கு குறிப்பிடப்பட்டவை யாவை?
ஆ) இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள முதுமொழி யாது?

ஐஏ. கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு – வாள் - தண்டு – சக்கரம் இவற்றிற்கு மேலே தெய்வப்படைகளிலும் கைவைக்கிற சமயம் அந்த சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலுங் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள். வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள்.

அ) இங்கு கூட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயங்கள் யாவை?
ஆ) வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள் என்பதன் மூலம் கூறப்படுவது யாது?

ஏ. என்னுடைய மகன் அப்படியல்ல. அவனுடைய விரல்கள் பட்டுத்துணியில் படுவது போல மெல்லப்பட்டு நகரும்விசைக் கட்டையில் அவன் விரல்கள் வண்ணத்துப்பூச்சி பறப்பது போல தொட்டுத்தொட்டுப் பறந்தபடியே இருக்கும். எழுத்துக்கள் திரையிலே மின்னிமின்னி கை கோர்த்துக் கொண்டு வரும்போது பார்க்கக் கொள்ளை அழகாக இருக்கும்.

அ) இங்கு கையாளப்பட்ட அணியைக் குறிப்பிட்டு விளக்குக.
ஆ) இங்கு குறிப்பிடப்படும் விடயம் யாது?

03) குற்றாலக் குறவஞ்சியில்

அ) மலைச் சிறப்பு

ஆ) நாட்டுச் சிறப்பு

ஆகியன விபரிக்கப்டுமாற்றை விளக்குக.

அல்லது

பாரதியார் சுயசரிதையில்

அ) ஒருவர் தாம் விரும்பியவற்றை அடையாமற் போவதற்கான காரணங்கள்

ஆ) தாம் விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் இயல்புகள் என்பன எடுத்துக் காட்டப்பட்ருக்குமாற்றை விளக்குக.

04) ‘நாவலர் எழுந்தார்’ என்ற கட்டுரையிலே

அ) கூட்டம் பற்றிய விபரிப்பு

ஆ) நாவலர் வீறு கொண்டு எழுந்த விதம்
ஆகியன சித்தரிக்கப்படுமாற்றை விளக்கிக் காட்டுக.

அல்லது

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

வெற்றிவேற்கையிலே

அ) பனையின் இயல்பு

ஆ) ஆலமரத்தின் இயல்பு
என்பன எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் விதத்தைத் தெளிவுபடுத்துக.

5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து விடை எழுதுக.

05) 'கம்பியூட்டர்' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) கதாசிரியருக்கு கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவமின்மை
ஆ) அந்த அனுபவமின்மையோடு தொடர்புபடுத்தி தனது அமெரிக்க அனுபவத்தை விபரிக்கும் விதம்

06) சிலேடைப் பாடலிலே

அ) பாம்புக்கும்
ஆ) எள்ளுக்கும்

உள்ள ஒத்த இயல்புகளை எடுத்து விளக்குக.

07) 'ஓர் தட்டிலே பொன்னும்...' எனும் தனிப்பாடலில்

அ) பஞ்ச காலத்தின் நிலைமை

ஆ) வள்ளலின் கொடைச்சிறப்பு

ஆகியன எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை விளக்குக.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk